CC.No. 522/2018

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2025**

**1 மற்றும் 2 ம் எதிரி ஆஜர்.**

**அ.சா. – 4**

**பெயர் – கோவிந்தன் (60) த/பெ.திருக்கருக்கான், அனந்தபுரம்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அனந்தபுரம் கிராமத்தில் கீழ்மலையில் வசித்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு வெகு காலமாக தெரியும். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பிலிருந்தே அ.சா.1 யை தெரியும் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும் அவர்களை சண்டை நடந்த அன்று பார்த்தேன். நான் சம்பவ இடத்திடம் மூட்டை தூக்கி கொண்டு சென்றேன். இந்த வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்த அன்று தான் என்னை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்திருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 அனந்தபுரம் பஜாரில் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 ன் கடைக்கு அருகிலும் எதிரிலும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். அங்குள்ள கடைகளில் சிறிய பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அனைவரும் ஒன்று கூடிவிடுவார்கள் என்றால் சரிதான்

2. அ.சா.1 ன் கடைக்கு சுமார் 200 மீ தொலையில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அங்கு பிரச்சனை ஏற்பட்டால் காவலர்கள் வருவதற்கு கூட வாய்ப்புகள் உள்ளன என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.2 க்கும் நான் அங்கு செல்வதற்கு முன்னால் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணை சாட்சியத்தை அளிப்பதற்கு அ.சா.1 அழைத்ததன் பேரில் தான் வந்தேன் என்றால் சரிதான். இன்றும் அவருடன் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான்.

3. ஆஜர் எதிரிகள் சித்தரசூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் அவர்களிடம் சம்பவத்திற்கு பின்னிட்டு பேசவில்லை. நான் சம்பவ இடத்திடம் சென்றபோது முதலில் நான் தான் இருந்தேன் நான் சத்தம்போட்ட பிறகு சுமார் 7– 8 நபர்கள் வந்தனர். சண்டை சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது. அ.சா.2 காயக்கறிகளுக்கு அதிகமான விலை போட்டு எதிரிகளிடம் கேட்டதால் தான் எதிரிகளுக்கும் அ.சா.2 க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். சண்டை முடிந்து எதிரிகள் சென்றுவிட்டனர் என்றால் இல்லை அ.சா.1 வந்த பிறகு எதிரிகள் சிறிது துாரம் சென்றனர்.

4. சண்டை நடந்தபோது அ.சா.1 சம்பவ இடத்திடம் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 ம் அவரது குடும்பத்தினரும் எனக்கு வெகு காலமாக பழக்கம் என்ற

**காரணத்தினால் தான் நான் அ.சா.1 ற்கு ஆதராவாக அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.**

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.